**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102121

1. District மாவட்டம் : திருப்பத்தூர் PS: காவல்நிலையம்: லஞ்ச ஒழிப்பு /வேலூர் Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/2023 Date: நாள் 24-01-2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (லஞ்சஒழிப்பு பிரிவு) Sections பிரிவுகள்: U/S 7
   (ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: in PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் 13·01·2023, 15·01·2023, 17·01·2023 Date to : நாள் வரை 23·01·2023
   Time Period நேர அளவு : 10·00 Time from நேரம் முதல் : Time to : நேரம் வரை 15·00 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-01-2023 Time நேரம் : 08·00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL I Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 19 Km வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மல்லகுண்டா கிராமம், கிராம நிர்வாக அலுவலகம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. தமிழரசன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைக்கண்ணு
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் இராணுவம் (g) Address : முகவரி No 3/124, பஜனைகோயில் வட்டம், சேர்ணம்பட்டி கிராமம் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் - 7010522342

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. முனியப்பன், கிராம நிர்வாக அலுவலர், மல்லகுண்டா கிராமம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24.01.23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24/01/2023
Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.01.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ..............................

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் B.கௌரி ஆகிய நான் 24.01.2023 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு. D. தமிழரசன், த/பெ துரைகண்ணு, எண்.3/124, பரசுராமன் வட்டம், கேத்தாண்டப்பட்டி கிராமம், சுகர்மில் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகார் மனு பின்வருமாறு: அனுப்புநர் D. தமிழரசன் த/பெ துரைகண்ணு எண்.3/124, பரசுராமன் வட்டம், கேத்தாண்டப்பட்டி கிராமம், சுகர்மில் அஞ்சல், நாட்றம்பள்ளி வட்டம், திருப்பத்தூர் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர் அய்யா, நான் திருப்பத்தூர் மாவட்டம் கேத்ததாண்டப்பட்டி கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் இராணுவத்தில் பணிபுரிந்து வருகிறேன். தற்சமயம் காஷ்மீர் பார்டரில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 01.01.2023 ஆம் தேதி முதல் என்னுடைய நாற்பது நாட்கள் வருடாந்திர விடுப்பில் எனது சொந்த ஊரான கேத்தாண்டப்பட்டிக்கு வந்துள்ளேன். திருப்பத்தூர் மாவட்டம் மல்லகுண்டா கிராமத்தில் என்னுடைய அப்பா பெயரில் மல்லகுண்டா சர்வே எண் 475/7A, பட்டா எண் 2237-ல் சுமார் 1.64 ஏக்கர் நிலம் இருந்தது. என்னுடைய அப்பா அந்த நிலத்தை கடந்த 01.06.2017 ஆம் ஆண்டு எனக்கு தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். நான் தொடர்ந்து பணியில் இருப்பதால் அந்த நிலத்தின் பட்டாவை என்னுடைய அப்பா பெயரில் இருந்து என்னுடைய பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய முடியவில்லை. நான் தற்சமயம் விடுப்பில் வந்துள்ளதால் அந்த நிலத்தின் பட்டாவை என்னுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த 12.01.2023 ஆம் தேதி E-சேவை மையத்தில் ஆன்லைனில் விண்ணப்பித்தேன். கடந்த 13.01.2023 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் என்னுடைய மனு சம்மந்தமாக மல்லகுண்டா கிராம நிர்வாக அலுவலரை பார்க்க மல்லகுண்டா VAO ஆபீஸிற்கு போனேன். அப்போது மல்லகுண்டா VAO அவரது ஆபீஸில் இல்லாததால், நான் அந்த ஆபீஸிற்கு வெளியில் வெளியில் எழுதியிருந்த VAO வின் செல்போன் நெம்பர் 9944128459-க்கு போன் செய்தேன். அந்த செல்போனை எடுத்து பேசியவர் தனது பெயர் முனியப்பன் என்றும், மல்லகுண்டா கிராம நிர்வாக அலுவலர் என்றும் தான் பொங்கல் செலவு வாங்க வெளியில் வந்திருப்பதாகவும் சொன்னார். மேலும், அவர் என்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப்பில் வந்து நிற்க சொன்னார். நான் அந்த இடத்திற்கு போவதற்குள் அவர் என்னுடைய செல்போனிற்கு

மூன்று முறை தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப்பிற்கு வந்து விட்டீர்களா என்று கேட்டுக் கொண்டே இருந்தார். நானும் பத்திர நகல் மற்றும் ஆன்லைன் விண்ணப்பம் நகல் எல்லாம் எடுத்துக் கொண்டு VAO முனியப்பன் அவர்கள் சொன்ன இடத்திற்கு போனேன். அப்போது அங்கு நின்றிருந்த நபர் தன்னை முனியப்பன் VAO என்று அறிமுகம் செய்து கொண்டார். பின்னர், அவரிடம் நான் என்னிடம் இருந்த ஆவணங்களை கொடுத்தேன். அதை அவர் வாங்கிக்கொண்டு அந்த ஆவணங்களை பார்த்துவிட்டு என்னிடம் எனக்கு ரூ.4,000/- பணம் கொடுத்தால் நான் உடனே பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், வீட்டு வேலை நடந்துக்கிட்டிருக்கு, இருக்கிற பணத்தில் சிமெண்ட் எடுக்க வேண்டும் என்று சொன்னேன். அவர் மீண்டும் என்னிடம் பணம் ரூ.4,000/- கொடுத்தால்தான் பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். பின்னர், கடந்த 15.01.2023 ஆம் தேதி VAO முனியப்பன் அவர்கள் அவருடைய செல்போனில் எனக்கு போன் செய்து பணம் ரூ.4,000/- ரெடி செய்து விட்டாயா என்று கேட்டார். நான் அவரிடம் இன்னும் இல்லை என்று சொன்னேன். பின்னர், கடந்த 17.01.2023 ஆம் தேதி நான் திரு.முனியப்பன் அவர்களுக்கு போன் செய்து என்னுடைய மனு சம்மந்தமாக விசாரித்தேன். அப்போதும் அவர் என்னிடம் பணம் ரூ.4,000/- ஐ கொடுக்க சொல்லி கேட்டார். நானும் அவரிடம் என்னால் அவ்வளவு தொகையை கொடுக்க முடியாது, கொஞ்சம் பார்த்து குறைத்து சொல்லுங்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம் உங்க வேலையை முடித்து கொடுக்க அதிகாரிகளுக்கு பணம் கொடுக்க வேண்டி உள்ளது, ரூ.500/- குறைத்து ரூ.3500/- ஆக கொடுக்குமாறு கறாராய் சொன்னார். நான் மீண்டும் என்னிடம் அவ்வளவு இல்லை கொஞ்சம் குறைத்து சொல்லுங்க என்று கேட்டதற்கு ரூ.3000/- கொடுக்குமாறு சொன்னார். மீண்டும் நான் நேற்று 23.01.23 ஆம் தேதி நான் VAO முனியப்பன் அவர்களுக்கு போன் செய்து என்னுடைய மனு குறித்து விசாரித்தபோது, அவர் தான் நாட்றம்பள்ளியில் இருப்பதாகவும், தண்ணீர்பந்தல் பஸ் ஸ்டாப்பிற்கு என்னை வரும்படி சொன்னார். நானும் அவரை 3 மணிக்கு போய் பார்த்தேன். அப்போது அவர் என்னுடைய வேலையை முடித்து கொடுக்க என்னிடம் பணம் ரூ.3000/- ஐ கொடுக்கும்படி மீண்டும் கேட்டார். நானும் அவரிடம் பணத்தை தயார் செய்து கொண்டு நாளை 24.01.2023 ஆம் தேதி வந்து பார்ப்பதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னுடைய மனுவின் ஆன் லைன் ஸ்டேட்டஸ் பார்க்கும்போது Pending with Zonal Deputy Tahsildar from 23.01.23 என்று இருந்ததால்

நான் நாட்றம்பள்ளியில் உள்ள Zonal Deputy Tahsildar ஆபீஸிற்கு போய் Zonal Deputy Tahsildar அவர்களை பார்த்து, 'என்னுடைய ஆன் லைன் மனுவை காண்பித்தேன். அவரும் என்னிடம் மல்லகுண்டா VAO வை போய் பாருங்கள் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. அதனால் என்னிடம் பணம் கேட்கும் மல்லகுண்டா கிராம நிர்வாக அலுவலர் திரு.முனியப்பன் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். என் அப்பாவின் பெயரில் உள்ள பட்டா நகல் மற்றும் இ-சேவை மையத்தில் பெற்ற அப்ளிகேஷன் நகல் இரண்டும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (SD/XXX) (D.Tamilarasasn) 24.01.23

Sir,

i. Received the complaint on 24.01.2023 at 08.00 hrs., registered a case in Tirupathur Vigilance and Anti-Corruption Cr. No. 01/2023, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 was registered on 24.01.2023 at 09.00 hrs. Sd/-xxxxx பா.கௌரி, 24/01/2023 Inspector of Police, Vigilance & Anti Corruption, Tirupathur.

ii. Original First Information Report, Complaint, Online application for patta name transfer and copy of previous patta are submitted to the Hon'ble Chief Judicial Magistrate / Special Judge, Vellore and other copies to officers concerned.

24/01/2023

*Inspector of Police*
*Vigilance & Anti-Corruption*
*Tirupathur*